Registered as a News Paper

பக்கங்கள் : 04

விலைரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 17 (02 - 09 - 1992) புதன்கிழமை ஓசை 197

## இன அடிப்படையில் லஞ்சம்

லஞ்சம் வாங்குவதிலும் இன அடிப்படை பேணப்படுவதாக லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட சம்மாந்துறைக் கிராமத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வு நிதி உதவி 4,000 ரூபாவைப் பெறுவதற்கு முஸ்லிம்கள் 500 ரூபாவும், சிங்களவர் 1000 ரூபாவும், தமிழர் 2,000 ரூபாவும் கிராமசேவையாளர்களுக்கு லஞ்சமாக வழங்கியுள்ளார்கள் என்பது விசாரணையிலிருந்து தெரியவருகிறது. இதற்கென ஒரு அட்டவணையை கிராமசேவகர்கள் வைத்திருந்ததை லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக ஐந்து கிராமசேவகர்கள் மீது லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். லஞ்சப் பணத்தைக் கிராமசேவகர்கள் தாமே நேரடியாக வசூலிக்காமல் இதற்கென சிலரை (4 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பாரிய தேடுதல் வேட்டை

# இராணுவ கெடுபிடிகள் அதிகரிப்பு

## தினமும் கிராமங்கள் சுற்றிவளைப்பு

## பெருமளவில் தமிழ் இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் பாரிய தேடுதல் வேட்டையும் இராணுவக் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன. பல தமிழ்க்கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பெருமளவு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோயில் போரதீவு, முனைத்தீவு, தும்பன்கேணி, காந்திபுரம், களுவுந்தன்வெளி, திக்கோடை, 39 ஆம், 40 ஆம் கிராமங்கள், மாவற்குடா, கற்சேனை, மாவடிமுன்மாரி, விவேகானந்தபுரம், பனையறுப்பானபாம, துறைவனையடி ஊற்று, மண்டூர், வெல்லாவெளி, குருமன்வெளி, போரதீவு, மகிளூர் உட்பட பல கிராமங்கள் சிறிலங்கா இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டன.

பொதுமக்களை பொதுஇடங்களுக்கு வரும்படி அழைத்து விசாரணை நடத்தியதுடன் வீடு, வீடாக தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் மக்கள் பெரும் பீதியுடன் இருந்தனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தேடுதல் நடவடிக்கையில் பல நூற்றுக்கணக்கான ராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### கடுக்காமுனை பகுதியில் இளைஞன் கைது

[கொக்கட்டிச்சோலை]

கொக்கட்டிச்சோலை சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசவிரோத குழுவினரும் இணைந்து தேடுதல் நடாத்தி ஓர் அப்பாவி இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

மையில் உள்ள கடுக்காமுனை என்ற கிராமத்தையும் அதனை அண்டிய பகுதிகளையும் சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தினர். இறுதியில் இக்கிராமத்தைச் சேர்ந்த நடராஜா கணேசன் (வயது 18) என்ற இளைஞரை கைது செய்து முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

### 13 கிராமத்தைச் சேர்ந்த 32 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு முகாம்களிலிருந்து வெளியேறி பல கிராமங்களையும் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசத் துரோகிகளும் இணைந்து முப்பத்திரெண்டு பொது மக்களைக் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் வெல்லாவெளி, பாலையடிவெட்டை, பெரியபோரைதீவு, பழுகாமம், 36 ஆம் கிராமம், 19 ஆம் கட்டை, கொக்கட்டிச்சோலை ஆகிய சிறிலங்கா

தேசத்துரோகிகளும் இணைந்து தும்பன்கேணி காந்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

### லலித்தை தாக்கியவர்களை கைதுசெய்ய தடயம் இல்லை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரான லலித் அத்துலத் முதலியும் அவரது குழுவினரும் கடந்த சனியன்று தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் பொலிசார் தாக்கியவர்களைக் கைது செய்வதற்குரிய தடயம் எதையும் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

பட்டப்பகலில் நடந்த இச்சம்பவம் பற்றி கண்ணால் கண்டவர்கள் அளித்த சாட்சியங்களிலிருந்து இத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அப்பகுதியில் வசிப்பவர்களே என ஊகிக்க முடிவதாக பொலிசார் கூறுகின்றனர் எனினும் எவரையும் கைது செய்வதற்கு முன்பாக கிடைக்கும் ஒவ்வொரு துப்பும் நன்கு ஆராயப்படுவதாக அவர் கூறினார்.

### அகதிகள் வருகையை தடுக்க ஜேர்மன் யாப்பில் மாற்றம்

(பேர்லின்)

வெளிநாட்டவர்கள் ஜேர்மனிக்குள் அகதிகளாக வருவதைக் குறைக்கத் துரிதமாக நடவடிக்கை எடுக்க உதவும் வகையில் யாப்பில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இவ்வருட இறுதியில் யாப்பில் மாற்றங்கள் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுக்கும், பிரதான எதிர்க்கட்சிக்கும் யாப்பில் மாற்றங்கள் செய்வது சம்பந்தமாக இணக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவருடத்தின் முதல் ஆறு மாதகாலப் பகுதியில் சுமார் இரண்டரை இலட்சம் அகதிகள் ஜேர்மனிக்குள் நுழைந்திருப்பதனாலேயே அகதிகள் மீதான தாக்குதல் தீவிரமாகியுள்ளதாகசொல்லப்படுகிறது.

ஜேர்மன் டென்மார்க் எல்லைப்புறத்திலிருந்து சுமார் இருபது கி. மீ. தொலைவில் அமைந்துள்ள றொஸ்ரக் நகரில் உள்ள அகதி முகாம்களின் மீதே தாக்குதல்கள் அதிகமாக இடம்பெறுகின்றன.

### வீடுகள் தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து அப்பகுதிகளில் உள்ள பொதுமக்களின் வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்து வருகின்றனர். நேற்று நண்பகல் தொடர்ச்சியாக மூன்று வீடுகள் இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### மனைப் பொருளியல் செய்முறைப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆண்டிற்கான க. பொ. த (உ/த) மனைப் பொருளியல் - செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றத்தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளுக்கு விசேட செய்முறைப் பரீ (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வழக்கு தள்ளுபடி

## நீதிபதிகள் ஏகமனதாக முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த

துள்ளது.

இது தொடர்பான தீர்ப்பினை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றத்தினால்

தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

தீர்ப்பு வழங்கப்பட்டபோது மனுதாரரும் இரண்டு பிரதிவாதிகளும் நீதிமன்றத்

வர்த்தகத் துறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரோல்ட் ஹெரத், வீடமைப்பு

லங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசவிரோத குழுவினரும் இணைந்து தேடுதல் நடாத்தி ஓர் அப்பாவி இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதி மேற்படி இராணுவ முகாமில் இருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் வெளியேறி அண்ணா இறுதியில் இக்கிராமத்தைச் சேர்ந்த நடராஜா கணேசன் (வயது 18) என்ற இளைஞரை கைது செய்து முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவ் இளைஞருக்கு தற்பொழுது என்ன நடந்தது என்ற தகவலைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

7.30 மணியளவில் வெல்லாவெளி, பாலையடிவெட்டை, பெரியபோரைதீவு, பழுகாமம், 36 ஆம் கிராமம், 19 ஆம் கட்டை, கொக்கட்டிச்சோலை ஆகிய சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும்

## கோயில் போரதீவில் எட்டு பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கோயில் போர தீவு, முனைத்தீவு பகுதிகளை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் எட்டுப் பொதுமக்களைக் கைது செய்து விசாரணைக்காக முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

கடந்த 28 ஆம் திகதி வெல்லாவெளி, பெரிய போரைதீவு, பழுகாமம் ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரும் ரெலோ துரோகிகளுமே மேற்படி இடங்களைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி பல பொதுமக்களைக் கைதுசெய்து பெரிய போரதீவு காளி கோவிலுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு அவர்களை விசாரணை செய்த பின் அழகையா சுந்தரலிங்கம் (22) பழுகாமம், வைரமுத்து லவக்குமார் (19) காந்திபுரம், சேதுநாதம்பிள்ளை தங்கததுரை (20) கோயில் போரைதீவு, சின்னத்தம்பி தியாகராசா (18) முனைத்தீவு, செல்லத்துரை ராஜா (16) முனைத்தீவு வீரக்

[4-ம் பக்கம் பார்க்க]

## முஸ்லிம் ஊர்காவலர் சூடு இளைஞன் படுகாயம்

(நாவற்குடா)

மட்டு நகரில் முஸ்லிம் ஊர்காவல் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார்.

கடந்த 28-ம் திகதி நண்பகல் நாவற்குடாவைச் சேர்ந்த விஜயன் என்பவர் காணாமல் போன தனது வலையைத் தேடிக் கொண்டிருந்தபோது ஊர்காவல் படையினர் இவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர். இவர் படுகாயமடைந்த நிலையில் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## ஓந்தாச்சி மடத்தில் ஒருவர் அடித்துக் கொலை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் ஓந்தாச்சி மடத்தில் வைத்து பொதுமகன் ஒருவரை அடித்துக்கொலை செய்துள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி மாலை 3.00மணியளவில் காளிக்குட்டி என்பவர் சாராயம் வாங்கி

[4-ம் பக்கம் பார்க்க]

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சேப மனுவை உயர் நீதிமன்றம் செலவுத் தொகையுடன் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.

இது தொடர்பான தீர்ப்பினை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. இத் தீர்ப்பினை பிரதம நீதியரசர் ஜி. பி. என். டி. சில்வா வாசித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்கத் தவறிவிட்டார் என நீதிபதிகள் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

தீர்ப்பு வழங்கப்பட்டபோது மனுதாரரும் இரண்டு பிரதிவாதிகளும் நீதிமன்றத்தில் சமுகமளித்திருக்கவில்லை.

தனிப்பட்ட தீர்பை வழங்கிய நீதியரசர் எம். டி. குணவர்த்தன உயர் நீதிமன்றத்தின் பெரும் பான்மையான முடிவை ஏற்றுக் கொள்வதோடு செலவுத் தொகை வழங்கப்படக்கூடாது என்றும் தீர்ப்பளித்தார்.

தீர்ப்பு வழங்கப்பட்ட சமயம் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க, வர்த்தகத் துறை அமைச்சர் ஏ. ஆர் மன்சூர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஹரோல்ட் ஹேரத், வீடமைப்பு அமைச்சர் சிறிசேனகுரே மற்றும் எம். பி. கள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் கீழ் ஆட்சேப மனு விசாரணை முடிவில் முதல் பிரதிவாதியான ஆர் பிரேமதாசா ஜனாதிபதி பதவிக்கு முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற உயர் நீதிமன்றத்தின் பத்திரத்தை உயர் நீதிமன்ற பதிவாளர் பந்துல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



### வீரவேங்கை அறிவுமணி

திருக்கோணமலை கும்புறுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார் 30 - 08 - 1992 காலை 10. 30 மணியளவில் இடம் பெற்ற இம் மோதலில் வீரவேங்கை அறிவுமணி (பிரசன்னா - நமசிவாயம் காளிராசா, 13 ஆம் கட்டை, தம்பலகாமம்) என்பவரே வீரச்சாவு அடைந்தவராவார்.

### லெப் அன்பழகன்

தட்டுவன் கொட்டிப் பகுதியில் 31-08-1992 அன்று அதிகாலை 2. 20 மணியளவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாற்பது நிமிட நேரம் வாசிக்கப்பட்ட தீர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கு தொடர்பான தீர்ப்பை வாசிக்க சுமார் நாற்பது நிமிடம் பிடித்ததென செய்திகள் தெரிவிக்கின்றன.

27,000 பக்கங்களில் இவ் வழக்கின் விசாரணை பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. ஆதரவாளர் மகிழ்ச்சி ஆரவாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டதும் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்தனர்.

பெருமளவு ஆதரவாளர்கள் பச்சைநிற தொப்பிகளை அணிந்தவாறு ஆரவாரம் செய்து கொண்டு பிரதான வீதி வழியாகப் பவனி வந்ததாகவும் செய்திகள் தெரிவிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சாய்ந்தமருதில் குண்டுவெடிப்பு 22முஸ்லிம்கள் பலி: 40 பேர் காயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் சாய்ந்த மருதுச் சந்தையில் நேற்றுக்காலை குண்டொன்று வெடித்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர். 40 பேர் காயமுற்றனர்.

கூட்டுப்படைத் தலைமையகம் வெளியிட்ட தகவலின்படி பாரிய காயங்களுக்குள்ளான ஐந்து பேர் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தக் குண்டு கைவிடப்பட்ட சைக்கிள் ஒன்றில் கட்டப்பட்ட ஐஸ்கிறீம் பெட்டியில் மறைத்து வைத்திருந்ததாகக் கருதப்படுகிறது. இந்தச் சம்பவம் பற்றி நேரில் அறிந்து கொள்வதற்கு ஏ.ஆர். மன்சூர், டி. தயாரெட்ணா, எம். ஏ அப்துல் மஜீத், ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம் அஸ்வர் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் சாய்ந்த மருதுவுக்குச் சென்றார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## எங்கள் அரசியலில் தலையிடாதே: அஷ்ரப் மீது முஸ்லிம்கள் பாய்ச்சல்

(கொழும்பு)

வடபகுதியிலிருந்து வந்திருக்கும் முஸ்லிம்களின் துன்பத்தின்மீது அரசியல்நடத்தவேண்டாம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையும், அதன் தலைவர் அஷ்ரப்பையும் வடபகுதி முஸ்லிம் அகதிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அஷ்ரப் தமது அரசியல் விளையாட்டுக்களை அப்பாறையுடன் நிறுத்திக்கொள்வது நல்லது. புத்தளத்தில் அமைதியாகவும், புரிந்துணர்வோடும் வாழும் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு இடையே பிளவுகளை அவர் தூண்ட வேண்டியதில்லை என்றும் அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## நீதி வழங்கப்படவில்லை; சிறிமாவோ தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கில் வழங்கப்பட்ட தீர்வு தன்னால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தமக்கு நீதி வழங்கப்படமாட்டாது என நன்றாக தெரிந்தமையாலேயே தீர்ப்பு வழங்கப்படும் போது தான் நீதிமன்றத்தில் சமுகமளிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

**நீர்வளம் பெருக்கி நிறைவினைப் பெறுவோம்**

## வரி விளம்பரம்

**your watches, Clocks & Radios**

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with ful guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna.

(Opposite old Vihare)

(சி-4970)

**பாலர் ஆசிரியர் பயிற்சி**

பாலர் ஆசிரியர் பயிற்சியில் க. பொ. த. (சா/த) சித்தியடைந்தவர்களும் சேரலாம். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. உயர்கலைக் கல்லூரி, 73 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம்,

(3108)


# 97 தமிழர் படுகொலை பொலிசார் காரணமல்ல

## -ஆணைக்குழு தீர்ப்பு

[கொழும்பு]

மட்டக்களப்பு முத்துகல, கரப்பொல கிராமங்களில் கடந்த ஏப்பிரல் மாதத்தில் 97 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு அங்குள்ள சிறிலங்கா பொலிசார் காரணமில்லை என படுகொலையை விசாரித்த சிறிலங்கா அரசால் நியமிக்கப்பட்ட ஜயலத் விசாரணைக் குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இப் படுகொலைபற்றி முன்னர் சிறிலங்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் இப் படுகொலையில் பொலிசாரும் ஈடுபட்டிருந்தது குறிப்பிடப்பட்டிருந்தது

முத்துகல, கரப்பொலகிராமங்களில் முஸ்லிம்கள் படுகொலைகளை நடாத்திய வேளையில் அங்கு அமைந்திருந்த பொலிஸ் நிலையத்தின் பொலிசாரோ அல்லது இராணுவமோ எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

பாதுகாப்புக்கருதி பொலிஸ் நிலையத்தில் சரண் புகுந்திருந்த தமிழ் மக்கள் வெட்டிக கொல்லப்பட்டனர் பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### கல்வியை தொடர வசதி செய்க

(கொழும்பு)

இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தில் தமிழகம் சென்ற இந்திய வம்சாவளியினருக்கு தமிழகத்தில் கல்வியைத் தொடர இட ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு தாயகம் திரும்பியோர் சம்பந்தமான கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அனைத்திந்திய தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி தலைவர்கள் மாவட்டத் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்படி தலைவர்கள் ஆலோசனை வழங்கினர்.

### கும்பாபிஷேகம்

கோண்டாவில்கிழக்கு ஞானப்பழனி முருகன் மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் வரும் 09-09-92 புதன்கிழமை அன்று காலை 6-30 மணி தொடக்கம் 8-30 மணிக்குமிடையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெற உள்ளது

லெப். நிதி ஞாபகார்த்த

## கால்பந்தாட்ட போட்டியில் 21 கழகங்கள் பங்குபற்றின

மன்னாரில் முதன் முதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்.நிதி [சுதாகர்] அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவாக ஆண்டான் குளம் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகம் ராதா அறிவாலயத்துடன் இணைந்து22, 23ஆம் திகதிகளில் மன்னார் பெரும் நிலப்பரப்பு முழங்காவில் பிரதேசங்களுட்பட்ட கழகங்கள் கலந்து கொண்டு மாபெரும் பந்தாட்டப் போட்டியை நடத்தியது.கால்பந்துப் போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றியது முதலாம் இடத்தை விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழகமும்,2 ஆம் இடத்தை அடம்பன் பழைய மாணவர் கழகமும் பெற்றுக்கொண்டன. கரப்பந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தை மாவுளங்கேணி அலோசியஸ் விளையாட்டு கழகமும்,இரண்டாம்இடத்தைபரியாரிகண்டல் அருநோதயம் விளையாட்டுக் கழகமும்பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க பாடசாலையும், இரண்டாம் இடத்தை மடுமாதா விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.23 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு சென் தோமஸ் கழகத் தலைவர் பத்மநாதன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய மன்னார் மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன் அவர்கள், 'மன்னார் மாவட்டத்திலேயே புலிகளின் ஆரம்பகால உறுப்பினர்களாக இருந்ததோடு இன்றைய போராளிகளை உருவாக்கிய பெருமையும் நிதியையே சேரும்' என்று கூறினார். இக் கூட்டத்தில் அடம்பன் பிரதேச பொறுப்பாளர் நந்தகுமார், மகளிர் முன்னணி உறுப்பினர் கொன்சி உட்பட பலர் உரையாற்றினர். இறுதியில் வெற்றிபெற்றவருக்கான பரிசை மன்னார் மாவட்டத் துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ் மாறன் வழங்கினார்.


## கேள்விப்பத்திர அறிவித்தல்

### இரண்டாம் தர (2nd Hand) றேடியேற்றர் கொள்வனவு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 'பேர்கின்ஸ்' மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்குப் பொருத்தக்கூடிய, நல்ல நிலையிலுள்ள றேடியேற்றர் ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது

அண்ணளவான அளவு - 21 '' X 18 '' X 3 ''


இதனை வைத்திருப்போர் 1992-09-14 காலை 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகத்தமது கூறுவிலைகளை நிதியாளர்' யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.

தேவையேற்படின் அதனை யாழ். பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்க வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''றேடியேற்றர் கொள்வனவிற்கான கூறுவிலை'' எனக்குறிப்பிடுதல் வேண்


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 03 |
| 03 | 08 |
| 19)4 | 1992 |



அமரர்

### டாக்டர் தம்பிப்பிள்ளை


## விற்பனையாளர் தேவை

மென்பானங்கள் விற்பனை செய்ய அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பதாரிகள் சந்தைப்படுத்தல் அதனுடன் தொடர்புடைய கணக்குகள் பேணுவதில் அனுபவமும், அறிவும் உள்ளவர்களாகவும், வாகனங்கள் செலுத்தக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் கீழ் உள்ள முகவரிக்கு 10. 9. 92க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம் 167
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
[சி4985]


## நன்றி நவிலல்



எனது மனைவியின் ஆத்ம சாந்திக்காக ஒப்புக் கொடுக்கப்பட்ட இரு திருப்பலிகளிலும் பங்கு கொண்டவர்களுக்கு நன்றி ''ஜீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் இவரை மறவாதீர்கள்.'' இன்று (02-09-92) பிற்பகல் 4 மணிக்கு சென்மேரிஸ் ஆலயம் நாவாந்துறையில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியிலும் பங்குபற்றி இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள்.

சூசை அல்பேட்
குடும்பத்தினர்.

(3111)

## நினைவு கூருகின்றோம்...

### 1992 - 09 - 02

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ குழந்தை (ராமசாமி - கண்டி)

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட -

டென்சில் (சூசை மனுவல் மிக்கேல் - தட்சணாமருதமடு, மடுக்கோயில், மன்னார்)

1989 ஆம் ஆண்டு கொற்றாவத்தையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சூரன் (அருணாசலம் சுரேந்திரதேவர் - யாழ்ப்பாணம்)

கரவெட்டி - ஆண்டான்வளவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சிற்றூர்திச் சாரதியான இராஜ கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

லெப். அன்ரன் / சிவா (கனகசபாபதி கனகராஜ் விநாயகபுரம், துணுக்காய், மாங்குளம், முல்லைத்தீவு)

2-ம் லெப். வசி [சுப்பிரமணியம கனகேஸ்வரன் - பாலையடி, விநாயகபுரம், துணுக்காய், மாங்குளம், முல்லைததீவு)

2 ம் லெப். சாரதி (இரத்தினம் கேதீஸ்வரன் - 12ஏ, 2-ம் படிவம், வவுனிகுளம், மாங்குளம், முல்லைத்தீவு,

மிரேஷ் (சிவலிங்கநாதன் சிவசங்கர்-கொத்தங்கலட்டி, வல்வெட்டித்துறை)

மிரேஷ் / நிரேஷ் (செல்வராசா சிறீதரன் - கொக்கிளாய், மணலாறு)

ஆப்தீன் (பாலசிங்கம் மோகனதாஸ் - மந்திப்புலம், கொக்குவில், யாழ்)

துஷ்யந்தன் (சின்னராசா உதயராசா - சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை)

கில்மன் (அரியரத்தினம் ஜீவரத்தினம்-பன்றிக்கெய்தகுளம, ஓமந்தை, வவுனியா)

நித்தி (சுப்பிரமணியம் சிவகுமார் - காந்திகிராமம், கோணாவில், கிளிநொச்சி)

பாலேஸ் (புளியங்குளம், வவுனியா)

முல்லைத்தீவு, சி. டபிள்யூ சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப்.பொஸ்ரின் (காளியப்பன் சுந்தரராஜ் - பரப்பாங் கண்டல், மன்னார்)

திருக்கோணமலை-தம்பலகமம்,பாலம்போட்டாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

சுமிந்தன் (விஜயபாகு விஜயகுமார் - வர்ணமேடு, தம்பலகமம், திருக்கோணமலை)

கபில் (வாசுதேவன் பரமேஸ்வரன்-தம்பலகமம், திருக்கோணமலை)

யாழ் கஸ்தூரியார் வீதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப்பிரிந்த

கப்டன் ரவி (மாசிலாமணி ரவிச்சந்திரன்-தையிட்டி காங்கேசன்துறை)

சின்ன அக்காச்சி [பஞ்சலிங்கம் தயானந்தன் -தயானந்தன் வீதி, நீர்வேலி தெற்கு]

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துப் பொதிகளைப் படகில் ஏற்றி வந்து கொண்டிருந்த போது சிறிலங்காக் கடற்படையினர் நெருங்கி வந்த நிலையில் - அவர்கள் கையில் சிக்கிவிடா வண்ணம் தனது படகினை வெடிக்க வைத்ததன் மூலம் வீரச்சாவெய்திய -

கடற்புலி

"றேடியேற்றர் கொள்வன விற்கான கூறு வி லை" எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 1992-09-14 அன்று காலை 10.30 மணிக்கு பல்கலைக் கழக சபை மண்டபத்தில் திறக்கப்படும்.

பதிவாளர்
யாழ்.பல்கலைக் கழகம்.

(சி/4984)

---

## டாக்டர் தம்பிப்பிள்ளை பொன்னம்பலம்

அறிவு நலம் சிறந்திருக்க, அன்புள்ளம் நிறைந்திருக்க
கண்ணியம் நிறைந்த உங்கள் கண்ணாடி முகம்
காணாது ஏங்கித் தவிக்கிறோம் ஐயா!
இனி எவ் இன்பம் எமக்கு நேர்ந்தாலும்
வழி காட்டி இன்றி நாம் வாழத் தவிக்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிர்
உள்ளவரை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

(3102)

---

இவரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தியுங்கள்.

சூசை அல்பேட்
குடும்பத்தினர்.

(3111)

---

## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



வீரஜனனம்
31-07-1973

வீரசொர்க்கம்
02-09-1990

### வீரவேங்கை மிரேஸ்
(சிவலிங்கநாதன் சிவசங்கர்)

சிவசங்கர் என்னும் நாமஞ்சூட்டி
சீருடன் வளர்த்த பெற்றோர்க்கு நீ ஒருவனே புத்திரன்
பவ ஞானச் செல்வனாய் குறும்புகள் செய்தும்
பள்ளிக்கும் கள்ளம் செய்வாய் சிறுவயதில்
தாய் தந்தையரை மறந்தாய் உன் அருமைத்
தங்கையையும் மறந்தாய் பத்து நாலு வயதினிலேயே
தாய் நாட்டை மீட்க என்று ஓடினாய் வீரப்புலி யானாய்
தயங்காமல் போராடி வீரசாகசங்கள் புரிந்தாய் முல்லைத்தீவினிலே
வீர காவியங்கள் கேட்டு மகிழ்ந்திருந்தோம் மிரேஸ்!
ஆனால் உன்
வீரத் தோற்றமும் பால்வடியும் முகமும் காண விழைந்தோம்-அந்தோ
நேரான போரதனில் நீ வீரசொர்க்கம் அடைந்தாய் முல்லையிலே யென்று
நினைக்கும் போது நெக்கு நெக்காய் உருகுகின்றோம்
இந்த இரண்டாம் வருடத்திலும்

முல்லைத்தீவினிலே 02-09-90 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் எமது மகனுடன் உயிர் நீத்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உன் பிரிவினை நினைவு கூரும்
அப்பா, அம்மா, தங்கை
மற்றும் உறவினர்கள்

வல்வை

(3089)

---

கினை வெடிக்க வைத்ததன் மூலம் வீரச்சாவெய்திய -
கடற்புலி

**கப்டன் மோகன் மேத்திரி** (காசிநாதன் நகுலேஸ்வரன்-நகுலேஸ்வரன் வீதி, நெடியகாடு வல்வெட்டித்துறை)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப்.கண்ணன்** (தங்கசாமி கேசவன் - ஆண்டாங்குளம், அடம்பன். மன்னார்)
**லெப்.இந்திரன்** (மரியதாஸ் மரியலூயிஸ் - 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு, திருக்கோணமலை)
**2-ம்லெப்.விஸ்வம்** (வீரசிங்கம் சிவராஸ் - கோண்டாவில் கிழக்கு)
**லெப்.கனகன்** (நாகலிங்கம் பாலேந்திரன் - 20, உருத்திரபுரம், கிளிநொச்சி)
**2-ம்லெப்.டெனி கண்ணன்** (செல்வராஜா சுதர்சன் - துவாரகன் வீதி, வாகையடி, மீசாலை)
**காவஸ்கர்** (கனகசபை சுமித்திரன் - சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி)
**நடேசதேவன்** (தம்பிராசா ஏரம்பமூர்த்தி - காஞ்சிபுரம், திருப்பழுகாமம், மட்டக்களப்பு)
**செந்தூரன்** (முருகேசு சுபாஸ்கரன் - 31, வன்னியர் வீதி, அன்புவழிபுரம், திருக்கோணமலை)
**பரணி** (பரஞ்சோதி புவனேஸ்வரன் - கோபாலபுரம், நிலாவெளி, திருக்கோணமலை)
**சுமித்திரா** (தர்சினி நடராசா - வட்டக்கச்சி, கிளிநொச்சி)
**கோவிந்தன்** (சிவலிங்கம் தெய்வேந்திரன் - விநாயகபுரம், திருக்கோயில், அம்பாறை)
**றோகின்ராஜ்** (சின்னத்தம்பி புஸ்பராஜா - தும்பங்கேணி, திக்கோடை, மட்டக்களப்பு)
**அமுதன்** (இராசதுரை சிவகுமார் - பல்லவராயன் கட்டு, முழங்காவில், மன்னார்)
**குமிழன்** (ஞானமனோகரன் கிருஸ்ணரூபன் - ஏழாலை வடக்கு)
**சுந்தரேஸ்** (சின்னத்தம்பி சபாரத்தினம் - 7-ம் வட்டாரம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)
**அமல்** (கந்தசாமி ராஜ்குமார் - 7, வாச்சிக்குடா, அக்கரைப்பற்று, அம்பாறை)
**மாதுலா** (கலாதேவி நல்லதம்பி - வன்னேரிக்குளம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4781)

---


மகளிருக்கான

## டிப்ளோமா மனையியலும், கைத்திறனும் பயிற்சிகள்

- கேக் ஐசிங்
- தையற் கலை
- சமையற் கலை
- கூந்தல் அலங்காரம்
- கைப்பணி
- பூ வேலை
- வர்ணம் தீட்டுதல்
- சித்திரக் கலை

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

பயிற்சி முடிவில் Diploma in Home Economics & Craft தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 06-09-1992
கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 07-09-1992

மேலும் விபரங்களுக்கு:-

கலாலயா
விக்டோரியா வீதி,
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]
யாழ் நகர்.

(சி/4983)

### சிந்தனைக்கு

தேம்பி அழும் குழந்தையின் மௌனமான சாபம் வலிமை மிக்கவனின் ஆத்திரத்தை விட வலிமை மிக்கது.

— எலிஸபெத் பிரவளனிங்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## நெருக்கடிக்குள் சிக்கியுள்ள இளைய தலைமுறை

இலங்கை பூராவும் சுமார் 8 லட்சத்து 39 ஆயிரம் சிறுவர்கள் பிரச்சினையில் சிக்கியுள்ளனர் இவர்களில் 4 லட்சத்து 87 ஆயிரம் சிறுவர்கள் நாட்டில் ஏற்பட்ட ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூன்றிலொருபங்கினர் 14 மாவட்டங்களில் உள்ள 470 முகாம்களில் வாழ்கின்றனர். இவர்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களே பெரும் பான்மையினராகும்.

இவ்வாறாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் குறித்து எதிர்வரும் ஏழாம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சார்க் நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகவும், இச்சிறுவர்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளதாகவும் சிறிலங்கா அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், இலங்கையில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் சிறுவர் பிரச்சினை இவ்வாறு அதிகரித்தமைக்கு யார் காரணம்? இனவாத நோக்கில் தமிழர் மீது இன ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்ட சிறிலங்கா அரசாங்கமே காரணமாகும். சிங்கள இராணுவம் படுகொலை புரிந்த தமிழர்களில் அநேகர் குடும்பஸ்தர்கள். அதிலும் இளம் குடும்பத்தினர். இவர்களின் படுகொலைகள் மூலம் சிறுவர்கள் அநாதையானார்கள். சுற்றிவளைப்பு தேடுதல் என்ற ரீதியில் மனைவி, பிள்ளைகளுடன் இருந்த கணவன்மார்கூட இழுத்துச் செல்லப்பட்டு கொல்லப்பட்டனர். சிலவேளை தாய், தந்தையர் இருவருமே கொல்லப்பட்டனர்.

அத்தோடு, சிங்கள இராணுவம் மேற்கொண்ட இன ஒடுக்கல் நடவடிக்கையினால் பலகோடிரூபா சொத்துக்களையும் உடைமைகளையும் தமிழ் மக்கள் இழந்தனர். உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி, தங்க இருப்பிடமின்றி அலைய வேண்டிய நிலை உருவாகியது. அதாவது மக்களின் பொருளாதார அமைப்பே சிதைக்கப்பட்டது. இதனால், குடும்ப வருமானம் பாதிக்கப்பட்டது. இதனால் தமிழ்ச் சிறுவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பும் அதிகமாகியது.

மேலும், இராணுவம் மருத்துவமனைகளை

## ஐரோப்பாவில் இலங்கைத் தமிழர் நவீன யூதர்களா?

தாயகத்திலிருந்து வெளியேறிய தமிழர்கள் ''நவீன யூதர்கள்'' ஆவார்களா? இரண்டாம் உலக மகாயுத்த காலத்தை யடுத்து தமக்கென ஒரு நாடில்லாத நிலையில் யூதர்கள் நாசிகளின் படுகொலைக்கு இலக்கானதோடு உலகமெங்கும் அலைந்து திரிந்ததைப்போல ''அக்கரைப் பச்சைகளை'' நாடி மேற்கு ஐரோப்பிய நகரங்களுச்குப் படையெடுத்த தமிழர்களும், அவர்களின் வாரிசுகளும், வழித்தோன்றல்களும் அவல வாழ்வுக்கு உள்ளாக நேருமா? என்ற கேள்விகள் அண்மைக் காலத்தில் பிறப்பெடுத் துள்ளன.

''மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று சுவிட்சர்லாந்தில் இருந்து கொழும்பு வந்து இலங்கை தமிழ் அகதிகளை கட்டம் கட்டமாக திருப்பி அனுப்புவது குறித்து ஆராய்வு நடத்துகின்றது.''

''ஜேர்மனியில் வெளிநாட்டவர்கள் தங்கியுள்ள முகாம்களின்மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கின்றன ஸ்கிங் ஹெட்ஸ் என்று அழைக்கப் படும் வலதுசாரி தீவிரவாதிகளுக்கு ஆதரவு வலுக்கின்றது இவர்கள் வெளிநாட்டவர்கள் மீது அவ்வப்போது தனிப்பட கொலை செய்வது, தாக்குதல் நடத்துவது. தஞ்சம் கோரியிருப்போரின் வீடுகளை தாக்குவது போன்ற செயல் களில் ஈடுபடுகின்றனர்.

''டென் மார்ச்கில் அகதிகள் முகாம்களில் தங்கியிருப்பவர்களை திருப்பி அனுப்புவது என்று அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சில முன் அறிவித்தல்கள் அகதி முகாம்களில் இருப்போருக்கு வழங்கப்பட்டுள்ளது''

இவைகடந்த வாரம் வந்த செய்திகளில் சிலவாகும்.

அகதிகளாக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர்கள் அங்கிருந்தும் அகதிகளாக மீண்டும் தாயகம் நோக்கி வரும் நிலை உடனடியாக வரும் என்று கூற முடியாது விட்டாலும், அதற்கான சாத்தியப்பாடுகள் அதிகரிப்பதற்கு கட்டியம் கூறுபவையாக இத்தகைய செய்திகள் உள்ளன.

ஜேர்மனியைப் பொறுத்த வரையில் 1990இல் இரண்டு ஜேர்மனிகளும் ஐக்கியப்பட்டதைத் தொடர்ந்து நவநாஜிகள் என்போர் பலம் பெற்று வருவதும், தடுத்து நிறுத்த முடியாமல் நீடிக்கும் அகதிகளின் படையெடுப்பும், ஐக்கியத்தின்விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் வெளிநாட்டவர்கள்மீது வெறுப்பு வளர்வதற்கு தூபமிடுவதாக இருக்கின்றது.

கடந்த வாரத்தில் ரொஸ்டொக் நகரில் நடந்த சம்பவம் ஜேர்மன் பொலிசாரையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. அங்கு வெளிநாட்டு அகதிகள் தங்கியிருந்த முகாம் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜேர்மன் இளைஞர்களால் சுற்றி வளைத்து தாக்கப்பட்டது. இவர்களின் தாக்குதல்களிலிருந்து அவ்விடுதியைப் பாதுகாக்க ஜேர்மன் பொலிசார் தொடர்ந்து நான்கு இரவுகள் பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது ஹம்பேர்க் போன்ற தூர இடங்களிலிருந்து கொண்டு வந்து இறக்கப்பட்ட கலகக்காரர்கள் உள்ளூர் மக்களின் உதவியோடு தாக்குதல் நடத்தினர். கலகக்காரர்கள் ஒருங்கிணைந்து தாக்கவும், பொலிஸ் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும் ரேடியோக் கருவிகளை (தொடர்புச் சாதனம்) கூட பயன்படுத்தியுள்ளனர். இதன் காரணமாக இந்தத் தாக்குதலை ஒரு கெரில்லாப் போர் என்று மெக்ஸன் பேர்க் மாநில பொலிஸ் துறைத் தலைவரான சிக்பிறைட் கோர்ட்ஸ் வர்ணித்துள்ளார். நல்லவேளையாக இவ்வாறு தாக்கப்பட்ட வெளிநாட்டவர் தங்கியிருந்த முகாமில் இலங்கைத் தமிழர்கள் இருக்கவில்லை அங்கு ரூமேனியாவிலிருந்து வந்த ஜிப்ஸி அகதிகளே தங்கியிருந்தனர்.

ஜேர்மனியில் 1991 ஆம் ஆண்டில் மட்டும் மூன்றாம் உலக நாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் 990 நிகழ்ந்துள்ளன இது அதற்கு முந்திய ஆண்டில் நடைபெற்ற சம்பவங்களை விட நான்கு மடங்கு அதிகம் என்பதும், நாற்பது ஆண்டு காலம் கம்யூனிஸ்ட் ஆட்சி நீடித்த கிழக்கு ஜேர்மன் பகுதியில் 493 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வெளிநாட்டவர்கள் அதிகரிப்புபற்றிய அச்சத்தைப் பரப்புவது தேர்தல்களின் போது வாக்குகளைக் கவரும் அம்சமாக விரிவடைந்து வருகிறது இதன் காரணமாக தீவிர வலதுசாரிப் போக்குடைய கட்சிகள் அடைக்கலம் வழங்குவதில் கடைப் பிடிக்கப்படும் தாராண்மை கைவிடப்பட வேண்டும் என்று பகிரங்கமாக கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதேபோல சுவிட்சர்லாந்திலும், வெளிநாட்டு அகதிகளின் வருகையால் வேலையின்மை வீதம் அதிகரித்து வருகின்றது. இதன்காரணமாக பொதுவாக வெளிநாட்டவர்களுக்கும், சிறப்பாக அகதிகளுக்கும் எதிராக எதிர்ப்பு உணர்ச்சி வளர்ந்து வருகின்றது அத்துடன் வளைகுடாயுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு, யூகோஸ்லாவியா நிலைமையினால் வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, மேலும் இலங்கையிலிருந்துவரும் தமிழ் அகதிகள் பொருளாதார காரணங்களாகவே வருவதாக இருக்கும் சந்தேகம் என்பன போன்ற பல்வேறு அம்சங்கள் சுவிட்சர்லாந்தில்வாழும் இலங்கைத்தமிழ் அகதிகளைப் பாதிக்கும் விடயங்களாக உள்ளன.

எனினும் இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேசம், லெபனான் போன்ற நாடுகளிலிருந்துவந்து சுவிட்சலாந்தில் அரசியல் தஞ்சம் கோருவோர் அக்கோரிக்கை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டவுடன் திருப்பி அனுப்பப்படுவது போல இலங்கை அகதிகளை இன்னமும் திருப்பி அனுப்பத்தொடங்கவில்லை.

இவ்வாறாக ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டிற்கு உரிய பிரத்தியேக காரணங்களால் இலங்கை அகதிகள்—அழையாத விருந்தினர்களாக நடாத்தப்படும் போதிலும் இந்தியா செய்வதைப் போல் திருப்பி அனுப்பவில்லை. இந்தியாவைத் தவிர மற்ற எந்த நாடும் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்பும் கொள்கை முடிவை மேற்கொள்ளா விடினும் இத்தகைய முடிவை எடுக்க வைப்பதற்கான முன்னோடி செயலாகவே இந்தியா நடந்து வருகின்றது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நிவாரணக் கமிஷனுடனும், இந்தியா இது விடயத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளமை மற்ற நாடுகளுக்கு ஒரு உந்துசக்தியாக இருக்கலாம்.

எது எப்படியாயினும், பொதுவாக இந்தியா இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கிய 1992இன் முதல் கால் பகுதியின் பின்னர் ஐரோப்பிய நாடுகளின் எண்ணப்பாங்கிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையாகும். இவ்வாண்டின் ஆரம்பத்தில் சுவிஸ் வந்தோரையும், குற்றச் செயல்களோடு சம்பந்தம் உள்ளவர்களையும் திருப்பி அனுப்புவதில் சுவிஸ் தீவிரமாக ஆலோசிக்கின்றது. எனவேதான் இந்த நிலையில்,

ஊரெங்கும் அகதி என்று அலைவோமா, அல்லது உயிரென்ன பெரிதென்று நிமிர்வோமா என்று கேட்கத் தோன்றுகிறது,

## அமெரிக்காவில் குற்ற செயல்கள் சாதனை அளவை எட்டின

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த ஆண்டில் குற்றச் சம்பவங்கள் ஒரு சாதனையை ஏற்படுத்தி இருப்பதாகஅரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றின் வாயிலாகத் தெரிய வருகிறது.

1991 ஆம் ஆண்டுக்கான குற்றவியல் அறிக்கை கடந்த ஞாயிறன்று வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையிலேயே இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகள், தாக்குதல்

ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

சட்டத்தை நிலைநாட்டவென உள்ளூரில் இயங்கும் 16,000 நிலையங்களிடமிருந்து இத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. 1991 இல் குற்றச்செயல்கள் ஒரு சத வீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது சமஷ்டி விசாரணைப் பிரிவு வெளியிட்டுள்ள மதிப்பீடொன்றிலிருந்து இது தெரியவருகின்றது

14,256 பேரின் கொலைகளுக்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்

ஞர்கள் ஆறில் ஒரு கொலைகளுக்கு பொறுப்பாளிகளாக இருந்துள்ளனர். வயது அடிப்படையில் பார்க்கும்போது இளைஞர்களே அதிககொலைகளைப் புரிந்திருக்கின்றனர்.

1980ஆம் ஆண்டுகளில் கொலைக் குற்றங்களுக்கென இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். ஆயினும் இப்போது கைதாகும் இளைஞர்களின் எண்ணிக்கை வெகுவாக உயர்ந்துள்ளது.

1991ஆம் ஆண்டில் ஒரு

தமிழ்நாடு, புதுச்சேரியில்

## காங்கிரஸ்நிர்வாகிகள்தெரிவு விரைவில் நடைபெறும்

எதிர்வரும் பெப்ரவரி இருபதாம் திகதிக்கு முன்பாக தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் தெரிவுக்கான தேர்தல்கள் நடத்தி முடிக்கப்படும் என்று அக்கட்சி கூறியுள்ளது

காங்கிரஸ் கட்சியின் இவ்விரு மாநிலங்களின் சார்பான பொறுப்புக்களை வகிக்கும் ஜனார்த்தன் பூஜாரி இதனை புதுடில்லியில் நேற்று அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் நடக்கவிருக்கும், தேர்தல்களின் போது மத்திய பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் மோதிலால் வோரா தேர்தல் அதிகாரியாக பணியாற்றுவார் என்றும், 1990-1991-ம் ஆண்டு உறுப்பினர் பட்டியலின் அடிப்படையில் தேர்தல் நடக்கும் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவில் சிறுபான்மை நலன்

## பதினைந்து அம்சத் திட்டம் திருத்தப்படவுள்ளது?

கப்பட்டது. இதனால் தமிழ்ச் சிறுவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பும் அதிகமாகியது.

மேலும், இராணுவம் மருத்துவமனைகளை நாசமாக்கியது. பாடசாலைகள் மீது குண்டு வீசியது, பலபாடசாலைகளில் முகாமிட்டது. இதனால் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் என்பன பாதிக்கப்பட்டன, சிறுவர்களின் எதிர்காலம் இருண்டு போனது.

அத்தோடு வடபகுதியின் மீது சிறிலங்கா மேற்கொண்ட பொருளாதாரத்தடையானது பல்வேறு வகையிலும் சிறுவர்களைப் பட்டினிபோட்டது தமிழ் பிரதேசங்களில் ஓரளவு வசதியான பகுதி எனக் கருதப்படும் யாழ். குடாநாட்டிலேயே போஷாக்கின்மையால் குழந்தைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களில் 1500 - 2000க்கு இடைப்பட்ட குழந்தைகள் படிப்படியாக இறந்து கொண்டிருப்பதாகவும் ஆய்வொன்று தெரிவிக்கின்றது. யாழ். குடாநாட்டிலேயே இந்நிலை என்றால் ஏனைய தமிழ் மாவட்டங்களின் நிலை பற்றி குறிப்பிடத்தேவையில்லை.

இப்போஷாக்கின்மையும், குழந்தைகளின் இறப்பும், பெற்றோரின் வருமானமின்மை இதன்விளைவாக உருவாகியுள்ள வறுமையும் காரணமாகும். ஆனால், இவையாவும் இயற்கையின் அனர்த்தத்தால் ஏற்பட்டதல்ல. சிங்களப் பேரினவாதத்தின் இனஒடுக்குமுறை நடவடிக்கையால் விளைந்ததாகும்.

இந்நிலையில் சிறுவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக மாநாடு நடத்துவதிலும், திட்டங்கள் தயாரிப்பதிலும், சிங்கள ஆட்சியாளர்கள் இறங்கியுள்ளார்கள். இதனால் பயனேதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. உண்மையிலேயே சிறுவர்களின் நலனில், அவர்களின் எதிர்காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் அக்கறை உடையதாக இருப்பின் முதலில் படுகொலைகளுக்கும், இழப்புக்களுக்கும் காரணமான இனவாதப் போக்கைக் கைவிடவேண்டும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும். போரினால் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வு அளிக்கவேண்டும். இவ்வாறான நடவடிக்கை மூலமே பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மட்டுமல்ல எதிர்காலத்திலும் சிறுவர்களுக்கு ஏற்படவுள்ள இழப்புக்களையும், சுமைகளையும் தவிர்க்க முடியும்.

ஆனால், சிங்கள அரசாங்கம் அதைச் செய்யுமா? படுகொலைகள் மூலம் தமிழ் இனத்தை ஒடுக்கி பலவீனப்படுத்தத் திட்டமிட்டு செயற்பட்டுவரும் சிங்கள அரசாங்கம் தானே உருவாக்கிய பிரச்சினைக்கு பிராந்திய மாநாட்டின் மூலம் எவ்வாறு தீர்வு கண்டுவிட முடியும்?

ஆனால், இச் சிறுவர்கள் எமது எதிர்காலச் சந்ததியினர். தமிழ் இனத்தின் எதிர்காலம் இவர்களின் கைளிலேயே உள்ளது. இவர்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் தமிழ் மக்கள் அனைவரதும் கடமை இவர்கள் பராமரிக்கப் படாமல் போனால் தமிழினமே வலுவிழந்து போய் விடும்.

---

இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகொலைகள், தாக்குதல்கள், கொள்ளைகள், கற்பழிப்புகள் என்பன 3. 6 சதவீதம் அதிகரித்துள்ளது. 1991 ஆம் ஆண்டில் 24,703 கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றன என்றும், ஒரு இலட்சத்துக்கு பத்து என்ற விகிதப்படி கொலைகள் இடம் பெற்றுள்

14,256 பேரின் கொலைகளுக்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பத்துக் கொலைகளுக்கும் ஆறு கொலைகளுக்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கைத்துப்பாக்கி வாயிலாக செய்யப்பட்ட கொலைகள் 13 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

15 முதல் 19 வயது இளை

வாக உயர்ந்துள்ளது.

1991 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பேருக்கு அதிகம் வாழும் மக்கள் உள்ள பகுதிகளில் இடம் பெற்ற கொலைகளில் ஒரு இலட்சத்துக்கு 80.6 சதவீத கொலைச் சம்பவங்கள் வாஷிங்டனில் நடந்துள்ளன.

# இஸ்ரேல் - பாலஸ்தீனியர் சமாதான பேச்சு இழுபறியில்

[வாஷிங்டன்]

இஸ்ரேல் - பாலஸ்தீனியர் குழுக்களுக்கிடையே வாஷிங்டனில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் முட்டுக் கட்டை நிலை தோன்றியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பாலஸ்தீனியர்களுக்கு ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதியில் சுயாட்சி வழங்குவது தொடர்பாக இஸ்ரேல் சமர்ப்பித்துள்ள யோசனைகள், பாலஸ்தீனியர்களின் நில உரிமையை அங்கீகரிக்கவில்லை என்றும், அப்பகுதிக்குள் ஜெரூசலேம் சேர்க்கப்படவில்லை என்றும், இவற்றினால் இந்த யோசனைகள் பாலஸ்தீனியருக்கு ஏற்புடையதல்ல என்றும் பாலஸ்தீனிய தூதுக்குழுவின் பேச்சாளர் திருமதி ஹானாள் அஷ்ரவீ கூறியுள்ளார்.

எனினும் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர் தூதுக்குழுக்கள் முட்டுக்கட்டை நிலையைப் போக்கும் வகையில் தொடர்ந்து பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றன. இப்பேச்சுவார்த்தைகள் இரண்டு வாரத்திற்கும் மேலாக நீடித்து வருவது தெரிந்ததே.

# பாக்.ராணுவத்துக்கு எதிராக சிந்துவில் துக்கதினம்

(கராச்சி)

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தேடும் பணியின் போது அத்து மீறி நடந்து கொண்டமைக்கும், சித்திரவதை மற்றும் உயிரிழப்பு ஏற்பட்டதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சிந்து மாகாண மக்கள் நேற்று துக்க தினம் அனுஷ்டித்தனர்.

இந்த துக்கதின அனுசரிப்புக்கு அழைப்பு விடுத்துள்ள சிந்துமாணவர்கள்முன்னேற்ற சம்மேளனம் மேலும் கூறுகையில் இராணுவத்தின் காவலில் இருக்கும் போது ஏராளமான சிந்து இளைஞர்கள் கொல்லப்பட்டதாகவும், நகரின்பல்வேறு பகுதிகளிலு மிருந்து நூற்றுத் தொண்ணூற்றியொரு சிதைக்கப்பட்ட சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் கூறியுள்ளனர். இதனைக்கராச்சியிலுள்ள மனிதஉரிமை ஸ்தாபனங்களும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன.

# இராணுவ இரகசியம் விற்ற குற்றவாளி 36 வருடம் சிறை

(வாஷிங்டன்)

வெளி நாடுகளுக்கு அமெரிக்க இராணுவ இரகசியங்களை விற்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட முன்னாள் அமெரிக்க இராணுவ சார்ஜண்ட் ஒருவருக்கு 36 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த ராம்சே (30) என்ற இந்த முன்னாள் இராணுவ சார்ஜண்ட் அமெரிக்க இராணுவ விமானங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை ஹங்கேரி, செக்கோஸ்லாவாக்கியா ஆகிய நாடுகளுக்கு விற்றதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார். இக்குற்றச்சாட்டை அவர் ஒத்துக் கொண்டதை அடுத்து இத்தண்டனை வழங்கப்பட்டது.

சமஷ்டி அதிகாரிகள் இவர் சம்பந்தப்பட்ட விசாரணையைத் தொடருகிறார்கள்.

# குண்டு வெடிப்பில் 9 பேர் பலி

அல்ஜியர்ஸ் விமான நிலையத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பொன்றில் 9பேர் உயிரிழந்தனர். 100பேருக்கும் அதிகமானோர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது சம்பவத்தை நேரில் காண்பதற்காக பிரதமர் பெலாயிட் அப்தஸ்ஸ்லாம் விரைந்துள்ளார்.

# பதினைந்து அம்சத் திட்டம் திருத்தப்படவுள்ளது?

இந்தியாவில் சிறுபான்மையினரின் நலனுக்கான பதினைந்துஅம்சத்திட்டம்மேலும் திருத்தப்படவுள்ளது என தெரியவருகிறது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநில நல்வாழ்வுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கான பொதுக் கருத்து எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சிறுபான்மையினர் நலன்கள் பற்றி ஆராயவும், அறிக்கை சமர்ப்பிக்கவும் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது என்றும் மத்திய நலவாழ்வுத்துறை அமைச்சர் சீதாராம் கேசரி புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்தார்.

அயோத்தி விவகாரத்தில்

# பாகிஸ்தான் தலையிடுகிறது; டில்லியில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகத்திற்கு எதிரே நேற்று காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பாகிஸ்தான் சட்டப்பேரவை அயோத்தியா விவகாரம் நிறைவேற்றிய தீர்மானம் இந்தியாவின் உள்விவகாரங்களில் அபபட்டமாக தலையிடுகிறது என்று கூறி அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பாகிஸ்தான் தூதுவரிடம் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் பாகிஸ்தானை விடவும் இந்தியாவில்தான் சிறுபான்மையினர் பாதுகாப்பாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பீகாரில் பொருளாதாரத் தடை நடவடிக்கை

# நிலைமையைக் கட்டுப்படுத்த இராணுவம் அழைப்பு

(டில்லி)

பீகாரில் ஜார்க்கஸ்ட் முக்தி மோர்கா அமைப்பு விடுத்துள்ள பொருளாதார தடை நடவடிக்கைகளால் எழக்கூடிய நிலைமைகளைக் கட்டுப்படுத்த இருபத்தேழு கம்பனிகள் பரா இராணுவத்தினர் அழைக்கப்பட்டுள்ளனர்.

பீகார் மாநிலத்தில் தனி மாநிலம் கோரிவரும் ஜார்க்கன்ட் முக்தி மோர்காவின் (சிபு சோரின் பிரிவு) சூடாநாக்பூர், பல்காசாப்பகுதியிலிருந்து கனிப்பொருள், மற்றும் மூலப் பொருள்கள் வெளியே எடுத்துச் செல்லப்படுவதற்குத் தடை விதித்துள்ளது.

ஜார்க்கன்ட்முக்தி மோர்சாவின் தனி மாநிலக் கோரிக்கைக்குப் பீகாரின் முன்னாள் முதல்வரும், பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவருமான ஜெகந்நாத்மிஸ்ராவும்ஆதரவு அளித்து வருவது தெரிந்ததே.

ஜார்க்கன்ட் முக்திமோர்சாவின் பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் இருக்கும் அனல் மின்நிலையங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகலாம். நிலக்கரி உட்பட பல்வேறு கனிமப் பொருள்கள் இப்பகுதியிலிருந்து வரவேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும்.

ஈழநாதம்

# நிவாரண உதவி வழங்க அமெரிக்கா நிபந்தனை

(கொழும்பு)

சிறிலங்கா அரசிற்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க அரசு நிபந்தனை விதித்திருக்கிறது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரண, புனர்வாழ்வுக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நிதி உதவிகளில் கணிசமான பகுதியை கடந்த காலத்தில் அமெரிக்க அரசாங்கமே சிறிலங்கா அரசிற்கு வழங்கி வந்துள்ளது.

அண்மைக்காலமாக அமெரிக்க அரசாங்கம் இவ்வாறான உதவிகளை வழங்குவதில் சில நிபந்தனைகளை விதிக்க ஆரம்பித்திருக்கிறது. பாதிக்கப்பட்டு நிவாரண உதவிகள் தேவைப்படும் மக்களிற்கென நடைமுறைப்படுத்தும் திட்டங்களிற்கு வேண்டிய நூறுவீதமான உதவிகளையும் தரமுடியாது என்றும் குறிப்பிட்ட ஒரு நிவாரணத் திட்டத்திற்கான மூன்றில் ஒரு பகுதி நிதியைகட்டாயமாக சிறிலங்கா அரசு ஒதுக்கீடு செய்தால் மட்டுமே மிகுதி மூன்றில் இரண்டு பகுதியை அமெரிக்க அரசு வழங்க முன்வரும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது. அத்துடன் உதவியாக வழங்கப்படும் பணத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளிலேயே நிவாரணத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் நிபந்தனை விதித்துள்ளது.

அதேவேளை அமெரிக்க அரசின் மேற்படி நிபந்தனையை ஏற்று நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா புனர்வாழ்வு அமைச்சுக்கு கணிசமான நிதி தேவைப் படுகிறது ஆனால் திறைசேரியில் தேவையான பணம் இல்லாத காரணத்தினால்மூன்றில் ஒரு பகுதி நிதியைச் செலவு செய்து மூன்றில்இரண்டு பகுதி நிதியைப்பெற்றுக்கொள்ளமுடியாதநிலை உருவாகியிருக்கிறது

எனினும்மேற்படி அமெரிக்க நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா அரசு முயற்சி எடுத்து வருகிறது என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு "போரூட்" உதவி

(சங்கானை)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து வலி.மேற்குப்பகுதியில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களிற்கு "போரூட்" நிறுவனம் நிவாரண உதவிகளை வழங்கிவருகிறது.

மேற்படி பகுதிகளில் சுமார் 30 அகதிமுகாம்களில் 2000 திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சிறுவர்களுக்கான கல்விவசதிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மேலதிக இருப்பிடவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் யாழ். செயலகத்துடன் இணைந்து முகாம்களை அமைக்கும் பணியிலும் மேற்படி நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

அதேவேளை மேலும் ஒரு தொகுதி நிவாரண உதவிப் பொருள்களைகொழும்பில்இருந்துஎடுத்துவருவதற்காக இந்நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றிருக்கிறார். (க)

## தச்சனா மருதமடுவில் அகதிமுகாம் திறப்பு

[யாழ்ப்பாணம்]

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் இருப்பிட வசதிக்கென தச்சனா மருதமடுவில் அகதி முகாம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் ஆலயத்தினரினால் நிர்மானிக்கப்பட்ட இவ் அகதி முகாமைத் திறந்து வைப்பதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலய தென்னாசியப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான அதிகாரி மன்னாருக்கு விஜயம் செய்துள்ளார்.

மடு அகதி முகாமைப்போல் அல்லாமல் அகதிகளுக்கு தேவையான பல வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது மலசல கூடம், சிறுவர் பாடசாலை, வைத்தியசாலை, குடிநீர்வசதி படமாளிகைபோன்ற பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் சுய தொழில் முயற்சிக்கான பயிற்சி நெறிகளும் மேற்கொள்ளப்பட்டிருககிறது இம் முகாமில் சுமார் 2,500 குடும்பங்கள் முதற் கட்டமாக குடியமர்த்தப்பட உள்ளன. (க),(ச)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரச்சாவு

## அதிபர்களுக்கான கூட்டம்

இடம் பெயர்ந்து யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கும் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்களிற்கான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ்/மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரசிங்கம் ஞாபகார்த்த நிர்வாகப் பிரிவில் அமைந்துள்ள ஆசிரியர் அறையில் நடைபெறும். சகல கொத்தணி அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பாடசாலை இடமாற்றம்

(நமது நிருபர்)

கடந்த மாத சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் வலிகாமம் வடக்கு வலி. மேற்கு வலி.தென் மேற்கு பாடசாலைகள் பல இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தற்போது பாதுகாப்புக்கருதி இப் பாடசாலைகள் பின்வரும் பாடசாலைகளில் மாலை நேரப் பாடசாலைகளாக இயங்கும் என யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இளவாலைக் கொத்தணி பாடசாலைகள்:-
(இம்மாற்றம் யா/மானிப்பாய் இந்து கல்லூரி இயங்க ஆரம்பிக்கும் போது அமுலாக்கப்படும்)
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அதன் கொத்தணிப் பாடசாலைகளிலும் மாலை நேரப் பாடசாலையாக இயங்கும்.

அளவெட்டிக் கொத்தணிப் பாடசாலைகள்:-
யா/யூனியன் கல்லூரியிலும் அதன் கொத்தணிப்பாடசாலைகளிலும் மாலை நேரப் பாடசாலையாக இயங்கும்.

அம்பனைக் கொத்தணிப் பாடசாலை:-
யா/மல்லாகம் மகா வித்தியாலயக் கொத்தணிப் பாடசாலையிலும் அதன் கீழுள்ள பாடசாலைகளிலும் மாலை நேரப் பாடசாலையாக நடைபெறும்.

பண்டத்தரிப்புக் கொத்தணிப் பாடசாலைகள்:-
யா/வட்டு இந்து கல்லூரியிலும் அதன் கொத்தணிப் பாடசாலைகளிலும் மாலைநேரப் பாடசாலையாக இயங்கும்.

யா/சில்லாலை றோ க. பாடசாலை:-
மாலை நேரப் பாடசாலையாக யா/மானிப்பாய் புனித ஆன்ஸ் றோ. க. பாடசாலையில் இயங்கும்

யா/வீமன்காமம் மகா வித். ) :-
யா/பொன் பரமானந்தா வித். )
யா/யூனியன் கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கும்.

### 13 கிராமத்தை

புரம், கழுவுந்தன்வெளி, திக்கோடை, 39, 40 ஆம் கிராமம், மாவற்குடா, கற்சேனை, மாவடிமுன்மாடி, விவேகானந்தபுரம், பனையருப்பான்பாம் துறைவனையடி ஊற்று ஆகிய கிராமங்களைத் திடீரெனச் சுற்றிவளைத்துஇப்பகுதிகளில் வாழ்ந்த முப்பத்திரெண்டு பொதுமக்களைக்கைதுசெய்து முகாம்களுக்குக்கொண்டுசென்றுள்ளனர்.

இவர்களால் கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் இதுவரைகிடைக்கவில்லை

### எங்கள்

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் சழகத்தின் சார்பாக எச்.எம் றிச்சார்ட் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில்

## மூதாட்டி மரணம்

நேற்றுமுன்தினம் ஆனைப் பந்திச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய மூதாட்டி நேற்று யாழ். போதனாவைத்தியசாலையில் காலமானார். சுமார் 70 வயது மதிக்கத்தக்க இவரின்பெயர் மங்கையற்கரசி எனத் தெரியவருகின்றது.

ஆனால் இவரைப் பற்றிய மேலதிக விபரங்களை அறிய முடியவில்லையாகையால், இவரைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

### ஐ தே க.

கின்றன.

அவுஸ்ரேலியாவிற்கும் சிறிலங்காவிற்குமான கிரிக்கட்

## தமிழக அரசு அலுவலக முன் மறியல்

# முன்னாள் அமைச்சர்கள் உட்பட 33 ஆயிரம் எதிர்க்கட்சியினர் கைது

[சென்னை]

சென்னையில் உள்ள சிறி ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை மீண்டும் அரசு கையேற்க வேண்டும் என்று தி.மு.க. கம்யூனிஸ்ட் கட்சி, மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஜனதா தளம் ஆகியவை நேற்று நடத்திய மறியல் போராட்டத்தில் 12,000 பேர் கைது செய்யப்பட்டனர் அத்துடன் முன்னெச்சரிக்கையாக 21,000 பேர் கைது செய்யப்பட்டனர்

நேற்றுக் காலையிலிருந்து தமிழக அரசு அலுவலகங்களிலிருந்து இந்தக் கட்சிகளின் தொண்டர்கள் அணியணியாக மறியல் செய்ய முற்பட்ட போது பொலிசார் அவர்களைக் கைது செய்தனர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் பொன் முத்துரமலிங்கம், அன்பில் தர்மலிங்கம், வீரபாண்டிய ஆறுமுகம், முன்னாள் சட்டப் பேரவைச் சபாநாயகர் டாக்டர் தமிழ் குடிமகன் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சென்னையில் திமுக இளைஞர் அணிச் செயலர் மு. க. ஸ்ராலின், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆலடி அருணாவும் எஸ். டி. எஸ் சோமுவும் கைது செய்யப்பட்டவர்களில் ஒரு சிலர். முன்னாள் அமைச்சர்களான காளிமுத்து, துரைமுருகன், ஆர்க்காடு வீரசாமி, மாக்சிய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர்களான மீனாட்சிசுந்தரம் ஏ. சௌந்தராஜன், கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர்களான ஏ. எம். கோபு, மகேந்திரன், கீதானந்தம், ஜனதாதளப் பிரமுகர் ராஜசேகரன் ஆகியோரும் கைது செய்யப்பட்டவர்களில் மற்றும் சிலர் ஆவர்.

இவர்கள் அனைவரும் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டு விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாளை நேர்முகப் பரீட்சை நேற்று கடிதங்கள்வந்தன

அண்மையில் சுகாதார அமைச்சினால் வடபகுதியில் இடைநிலை தொழில் நுட்பவியலாளர் தரத்திலிருந்து விண்ணப்பிக்கப்பட்டு பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 03 - 09 - 92 புதன் கொழும்பில் சுகாதார பிராந்தியப் பணிப்பாளர் தலைமையகத்தில் நடைபெற உள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட 27 பேருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாயினும் அவை உரியவர்களுக்கு தகுந்த நேரத்தில் கிடைக்கவில்லை எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஒரு சிலருக்கே இக் கடிதம் கிடைத்ததாகவும் கூறப்படுகிறது.

நாளை (3- 9- 92) கொழும்பில் நேர்முகப்பரீட்சை நடைபெற இருப்பதனால் தெரிவு செய்யப்பட்டோர் சமுகம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது

இதனால் தெரிவு செய்யப்பட்டோர் குழப்பநிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான விபரங்களை யாழ். போதனா வைத்தியசாலை உயரதிகாரிகளிடம் அறிந்து கொள்ளலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச)

### மனைப் பொருளியல்

ட்சை ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும் என யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. [பா]

### ஜனாதிபதி

அத்தபத்து பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். மு. கமட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

### பெற்றுக் கொள்ளவும்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் தடகள விழா திட்டமிட்டபடி 3-ம், 4-ம், 5-ம், 6-ம், திகதிகளில் யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

தெல்லிப்பழை வட்டப்பிரிவிலிருந்து போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் தங்கள் இலக்கங்களையும் போட்டியின் ஒழுங்கு நிரல்களையும் தெல்லிப்பழை பிரிவின் விளையாட்டலுவலரின் சக்தி அகம், உடுவில் கிழக்கு, மருதனார்மடம் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளுமாறு தெல்லிப்பழை வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

வீரஜனனம்

11
—
10
—
1972



வீரச்சாவு

02
—
09
—
1991

02 - 09 - 1991 அன்று மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

## வீரவேங்கை கோவிந்தன்

(சிவலிங்கம் தெய்வேந்திரன்)

தம்பி... தம்பி என்று
தவிக்குதடா எம் நெஞ்சம்
பெண்கள் நால்வருக்கு
தம்பியாய் நீ அவதரித்தாய்
குடும்பத்தில் ஆண்கள் நால்வர் - எண்மர்
என நாம் இருந்தோம்
இன்று எழுவருடன் வாழ்கிறோம்
தமிழீழம் காணவென்று அன்று
போருக்குச் சென்றாய் நீ
நேரில் புலியுடுப்பை காணவில்லை
உள் உடலைத்தானும் பார்க்கவில்லை
மணலாற்று மண்தனில் நீ
மாற்றான் கண் படாமல்
எத்தனை குண்டுகளை உன்
நெஞ்சுதனில் ஏற்றாயோ பாலகனே
ஆண்டு ஒன்றாகி விட்டதடா
ஆறாது எம் நெஞ்சமது
வேகுதடா உடம்பெல்லாம்
செந்தணல் போல் காயுதடா
வெள்ளிக் கிழமை தனில்
வெளிக்கிட்டாய் வீட்டை விட்டு
விடி வெள்ளி காணுமுன்னே
படுவெள்ளி யானாயோ - இனி
நாம் தொடர்வோம்
உன் பணியை.

விநாயகபுரம், திருக்கோயில், (மட்டு/அம்பாறை மாவட்டம்)

உன் பிரிவால் துயருறும் அம்மா, அண்ணா, அப்பு, சகோததரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்

[3112]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் 02- ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

றுக் கொள்வதற்கு சிறிலங்கா அரசு முயற்சி எடுத்து வருகிறது என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

## "குமண" புறப்படுகிறது

கொழும்பில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமண'' கப்பல் பருத்தித்துறையை நோக்கி இன்று புறப்பட்டு வரும் என யாழ் செயலகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இக் கப்பலில் அரிசி, மா, சீனி, பருப்பு, தபால்கள் மற்றும் தனியார் துறைசார்ந்த பொருள்கள் போன்றவை எடுத்துவரப்படவுள்ளன.

### கோயில்

குட்டி மகேந்திரன் (21) முனைத்தீவு பொன்னம்பலம் மகேந்திரன் (22) முனைத்தீவு, கனகநாயகம் குகபதி (33) அம்பிலாந்துறை ஆகியோரை மேல் விசாரணைக்காக முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் கழகத்தின் சார்பாக எல் எச்.எம் றிச்சார்ட் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் அஷ்ரப் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால் வடபகுதி முஸ்லிம்களுக்கு அல்ல என்றும் கூறப்பட்டுள்ளது.

### இன அடிப்படை

நியமித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு பாடசாலை அதிபரின் மனைவி, அஞ்சலக அதிபரின் மனைவி, கூட்டுத்தாபன அதிகாரியின் மனைவி மற்றும் கிராமசேவகர்களின் மனைவிமார்கள் மூன்று பேருமாக மொத்தம் ஆறுபெண்களும் லஞ்சப்பணத்தைப் பெறுவதில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது மேற்படிகிராமசேவகர்கள் 5 பேரும் மோசடி செய்து கிராமத்தில் இல்லாதவர்கள் பெயரிலும் உதவிப்பணத்தைக் கையாடியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

### ஐ தே க.

கின்றன.

அவுஸ்ரேலியாவிற்கும் சிறிலங்காவிற்குமான கிரிக்கட் போட்டி நேர்முக வர்ணனை இடை நிறுத்தப்பட்டு வழக்கின் தீர்ப்பு ஒலிபரப்பப்பட்டதும் பிரேமதாச ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்ததாகவும் தெரிய வருகிறது.

### வீரச்சாவு

இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்மோதலில் லெப்டினன்ட் அன்பழகன் (கந்தையா சசிக்குமார், திருநகர் கிளிநொச்சி) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவ் இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

### ஒங்காச்சி

வந்தபோது இவரை இடைமறித்த அதிரடிப் படையினர் அதனைஅவருக்கு பருக்கிவிட்டு அடித்துக் கொலை செய்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

உ
ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருஷம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (03 - 09 - 1992) வியாழக்கிழமை முற்பகல் 9 40 மணிமுதல் 10 52 வரையுமுள்ள துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது ஏக புதல்வன்
திருநிறைச் செல்வன்
**சந்திரமோகன்**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புதல்வி
திருநிறைச் செல்வி
**யோகராணி**
அவர்களுக்கும்

திருமாங்கல்ய தாரணம் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களுக்கு ஆசிகள் நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

திரு திருமதி கந்தசாமி
குடும்பத்தினர்
104/1 பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

திருமதி சின்னத்துரை
572/2 காங்கேசன்துறை சாலை
யாழ்ப்பாணம்.

[சி-4986]

அத்தப்பத்து பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். மு. கமட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

றுக் கொள்ளுமாறு தெல்லிப்பழை வட்டப் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர் கேட்டுக் கொள்கிறார்.

## மரண அறிவித்தல்

### கதிரவேலு இராசம்மா

மட்டுவில் வடக்கு, பொற்கொல்லர் வீதியைச் சேர்ந்த திருமதி கதிரவேலு இராசம்மா 1992 -09 -01 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் திரு. அ. கதிரவேலு பத்தரின் அன்பு மனைவியும் திரு செல்வராசா (உரிமையாளர் செல்வா நகை மாடம் சாவகச்சேரி), தங்கராசா, கிட்டிணசாமி கணேஸ்வரன், சாரதாம்பாள், சந்தானலட்சுமி ஆகியோரின் தாயாரும் த. தம்பையா, வசந்தபவானி, நாகேஸ்வரி, ஜெயதேவி, விஜயலதா ஆகியோரின் மாமியாரும் திரு திருமதி த. தெய்வேந்திரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (புதன்) 2 00 மணிக்கு வேம்பிராய் மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
க. செல்வராசா
(மகன்)

(3114)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 1-09-92

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-3998, 26-3177, 24-7941, 26-691, 28-7261, 24-8079, 25-7223, 26-7299, 26-8382, 28-1857, 22-4634 22-6691, 26-5576, 40-2573, 26-676, 37-1629, 26-5857, 24-5145, 41-0517, 26-4990, 24-6439, 26-3146, 24-6293, 40-1737, 27-9083, 24-0534, 26-5281, 26-1495, 27-7750, 37-2013, 28-6748, 36-8249, 26-4882, 24-4560, 42-1464, 26-7234, 24-8558, 22-4710, 28-8229, 22-8835, 24-2979, 24-2879, 26-3722, 27-9404, 42-0759, 27-6769, 41-9579, 41-8686, 36-6996

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

26-6075, 28-0657, 41-9480, 28-1062, 28-8444, 27-7711, 26-6197, 24-9676, 41-9175, 42-3239, 41-9855, 27-4289, 26-5882, 24-4350, 24-9825, 42-6119, 28-2342, 24-4153, 26-536, 40-3089, 26-7663, 31-7100, 36-779